செய்திக் குறிப்பு dt: 06.02.2018

காரைக்கால் மாவட்டம் திருமலைராயன்பட்டினம் பகுதியில் அமைந்துள்ள அரசு ஆங்கில தொடக்கப்பள்ளியில் இன்று காரை மாவட்ட ஆட்சியர் திரு. ஆர். கேசவன். இ.ஆ.ப. அவர்கள் திடீர் ஆய்வு மேற்க்கொண்டார்கள். அங்கு மதிய உணவு சாப்பிடும் குழந்தைகளிடம் சாப்பாடு நன்றாக உள்ளதா என கேட்டறிந்து ஆட்சியர் உணவை ருசித்து பார்த்தார்கள். பிறகு தலைமை ஆசிரியையிடம் கையேடுகள் மற்றும் இதர பொருட்கள் முறையாக வாங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்து அந்த Register- கோப்புகள் அனைத்தையும் ஆய்வு செய்தார்கள். பிறகு மாணவர் பயன்படுத்தும் கை அலம்பும் இடம். கழிவறைகள் போன்றவற்றையும் பார்வையிட்டார்கள். மேலும் ஆட்சியர் கூறுகையில் தினமும் நாங்கள் வந்து பார்ப்பதைவிட இங்கு பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் வந்து தினமும் உணவு நன்றாக உள்ளதா உணவு அளிக்கப்படுகிறார்களா என்பதை பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். மேலும் குழந்தைகள் அமர மேசை மற்றும் பெஞ்ச் இல்லை. இதை வரும் நிதியாண்டில் சரி செய்யப்படும் என்றும் ஆட்சியர் அவர்கள் சொன்னார்கள். உடன் தலைமை ஆசிரியை திருமதி. S. சாவித்திரி மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

வெ.
6/2/18